2014 டிசம்பர் 4]

அமைப்பதற்கு வேண்டிய பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

புராதன நகரம்

***31576— திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறையை புராதன நகரமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது பதிலினை இங்கே அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முஞ்சிறை பகுதி, மன்னர்கள் காலத்திலே பாசறை என்று அழைக்கப்பட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகத் திகழ்ந்து வந்தது. 15 ஆம் நூற்றாண்டில், முஞ்சிறையிலே சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட மகாதேவர் கோயிலில் பல சிற்பங்கள் உள்ளன. 1435 ஆம் ஆண்டு மேல்நாட்டு அரசர் வீரகேரளம் மார்த்தாண்டம் என்பவர் அங்கே தங்கியிருந்தார் என்றும், முஞ்சிறைப் பகுதியில் ஏராளமான மக்களுக்கு அன்னதானம் செய்து உதவினார் என்றும் வரலாறு*

சொல்கிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் முஞ்சிறைக்கு அருகில் உள்ள பார்த்திபசேகரபுரத்திலே சித்த வைத்திய பல்கலைக்கழகம் அமைந்திருந்தது என்றும் வரலாறு சொல்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பகுதியை, ஒரு புராதனப் பகுதியாக தேர்வு செய்து, மாற்ற வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. ஆகையால், தாங்கள் கருணைகூர்ந்து இந்தப் பகுதியை வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியாகத் தேர்வு செய்து, புராதன நகரமாக மாற்றிட வேண்டுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரத்தை புராதன நகரமாக அறிவிக்க வேண்டுமென்றால், அந்த நகரம் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அந்த நகரம் பாதுகாக்கப்படவேண்டிய வரலாற்றுச் சின்னங்கள் உள்ள நகரமாக இருக்கவேண்டும். புகழ் பெற்ற திருக்கோயில்கள் உள்ள நகரமாக இருக்கவேண்டும்; உதாரணத்திற்கு ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர். சுற்றுலாத் தலமாக இருக்கவேண்டும்; உதாரணத்திற்கு குற்றாலம், பிச்சாவரம் மற்றும் கன்னியாகுமரி. பாரம்பரியம்மிக்க நகரமாக இருக்கவேண்டும்; உதாரணத்திற்கு செட்டிநாடு, பூம்புகார். இப்படிப்பட்ட நகரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கோரிக்கையைப் பெற்று, புராதன நகரங்களாக அறிவிக்கப்படுகின்றன.

1992 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாமல்லபுரத்தில் நடைபெற்ற நாட்டிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, நமது பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் முதன்முதலாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதன்படி 1993-1994-ல் 38 இடங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டன. பின்னர் படிப்படியாக உயர்ந்து 64 நகரங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நகரங்கள் இன்றைக்கு பொலிவுடன் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. இதற்கென புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.50 இலட்சம் மானியமாக வழங்கிக் கொண்டிருந்தார்கள். 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொகை

2014 டிசம்பர் 4]

ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலுள்ள முஞ்சிறை ஊராட்சியை புராதன நகரமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அந்தக் கிராமம் Hills Area Conservation List-ல் உள்ளது. அதாவது மலையிடை கிராமப் பட்டியலில் உள்ளது. இதுகுறித்து H.A.C.A. Committee-ல் வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, புராதன நகரமாக அறிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் நிச்சயமாக மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு நிறைவேற்றித் தரும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முஞ்சிறை பகுதியில்தான் சிவன் ஆலயம் உள்ளது. 12 ஆலயங்களிலே இந்து பெருமக்கள் வழிபடுகின்ற, 'சிவாலய ஓட்டம்' நடைபெறுகின்ற நிகழ்வு உள்ளது. முதல் சிவன் ஆலயம் முஞ்சிறை பகுதியில்தான் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தப் பகுதியில் பணியை எப்பொழுது தொடங்குவீர்கள்? அதற்கு வாய்ப்பு இருக்கிறதா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வரலாற்று நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய, இதிகாசங்களில் இடம் பெற்றிருக்கக்கூடிய ஆரணி நகரை புராதன நகரமாக அறிவிக்க வேண்டுமென்று கடந்த 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசியபொழுது தெரிவிக்கப்பட்டது. அன்றைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்று

தெரிவித்திருந்தார்கள். இது எப்பொழுது பரிசீலிக்கப்படும்? ஆரணி பகுதியைப் புராதன நகரமாக அறிவிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்களுக்கு என்ன பதில் சொன்னேனோ, அதே பதில் மாண்புமிகு உறுப்பினருக்கும் பொருந்தும். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதற்கான கருத்துரு கேட்கப்பட்டு, புராதன நகரமாக அறிவிக்க வேண்டிய தகுதிகள் இருந்தால், நிச்சயமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய வழிகாட்டுதலுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசு இதை நிறைவேற்றித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

மேம்பாலம்

***6409—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத்*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS